# பெரியபுராணம் மற்றும் புலவர் புராணம் திருநாவுக்கரசர் வரலாறு ஒப்பீடு

# A comparison of the history of Tirunavukarasar in Periyapuranaம் and Pulavar Puranam

**பிரவீன் குமார் ம,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர் – 1

**Praveen Kumar M,** Research Scholar, Thavathiru Santhalinga Adigalar Arts Sciences Tamil College, Perur - 10.

ORCID : https://orcid.org/0009-0000-1446-711X

DOI : 10.5281/zenodo. 10544668

**Abstract**

Worship of God is originated from  people's fear. The worship evolved into various religions. Those religions were divided into six categories. Among them, Saivism with Lord Shiva as the primary deity developed as the primary religion.. The hymns in praise of Lord Shiva have been compiled into twelve volmes called Panniru Thirumurai. Devaram written by Thirunavukarasar plays an important role in this. He is one among  the Devara trio (Devara moovar). Periyapuranam narrated by Sekkizhar which explains life of disciples of Lord Shiva , mentions the merits of Thirunavukkarasar and all the Tamil works and religious works he did. Similarly, in the Pulavar Purana which he sang, Dandapani Swami, as one of the 72 poets, mentions all the merits and philanthropy of Thirunavukarasar. Thus, this article is a comparison of the history of Thirunavukarasar as told in both Puranas.

**ஆய்வுச் சுருக்கம்**

மக்களின் அச்சத்தின் வழியாகத் தோன்றியதுதான் கடவுள் வழிபாடு ஆகும். அக்கடவுள் வழிபாடு பல்வேறு சமயங்களாகத் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்தது. அச்சமயத்தை ஆறுவகையாகப் பிரித்தனர். இதில் சைவசமயம் முதன்மைச் சமயமாக வளர்ச்சி பெற்றது. சைவசமயம் என்பது சிவபெருமானை முதன்மைக் கடவுளாகக் கொண்டு வளர்ந்தது. சிவபெருமானைப் போற்றும் விதமாக அமையும் பாடல்களைப் பன்னிரண்டு திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர். திருமுறையில் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் என்று அழைக்கப்படுகின்றன. இதில் திருநாவுக்கரசர் தேவாரமானது முக்கியப்பங்கு கொண்டது. தேவார மூவர்களில் இவர் ஒருவராவார். அடியார்பெருமை கூறும்

பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசரின் சிறப்பியல்பினையும் அவர் செய்த தமிழ்ப்பணிகள், சமயப்பணிகள் என அனைத்தையும் குறிப்பிடுகிறார். அதுபோலவே தண்டபாணி சுவாமிகள் தாம் பாடிய புலவர் புராணத்தில் 72 புலவர்களுள் ஒருவராக, திருநாவுக்கரசரைப் பற்றிய சிறப்புகள் மற்றும் அவர் ஆற்றிய தொண்டு என அனைத்தையும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். அவ்வகையில் இரு புராணங்களிலும் கூறப்படும் திருநாவுக்கரசர் வரலாற்றை ஒப்பீடு செய்யும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

**Key words:** திருநாவுக்கரசர், புலவர் புராணம், பெரிய புராணம், திலகவதியார், இருபுராணம் ஒப்புமைகள், தண்டபாணி சுவாமிகள், Thirunavukarasar, Pulavar Puranam, Thilagavathiyar, Irupuranam

**முன்னுரை**

தமிழ் மொழியில் இலக்கியங்களை ஆறு வகையாகப் பிரிக்கின்றனர். அவை சங்க இலக்கியம், அறஇலக்கியம், காப்பியஇலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், இக்கால இலக்கியம் என்பனவாகும் என்னும் இச்செய்தி மு. அருணாச்சலம் அவர்கள் இயற்றிய தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலின் மூலம் அறியமுடிகிறது.(த.இ.பா - 34) மக்களை நல்வழியில் கொண்டு செல்ல பல கருத்துக்கள் இவற்றில் உள்ளன. ஆறு இலக்கியங்களில் ஒன்றான பக்தி இலக்கியம் மக்கள் தீய வழியில் செல்லாமல் இறைவனை அடையும் நல்ல நிலையினை அடைய உதவி செய்கிறது. பெரிய புராணமும், புலவர் புராணமும் பல அடியார்கள் மற்றும் புலவர்களின் வரலாற்றினைப் படிப்பவர்களை நல்வழிப்படுத்துமாறு இயற்றப்பட்டுள்ளன. இந்த இரு புராணங்களிலும் கூறப்படும் திருநாவுக்கரசரின் வரலாற்றைப் பற்றிய செய்திகள் ஒப்புமை செய்து விளக்குவதாக இந்தக் கட்டுரை அமைகிறது.

**புலவர் புராணம் மற்றும் பெரிய புராணம்**

**பெரிய புராணம்**

உலக மக்களுக்குப் பொதுவானவராகச் சிவபெருமான் கருதப்படுகிறார். தொல்காப்பியத்தில் திணைக்கூறிய தெய்வமாக குறிக்கப்பெறாத்தலும் சங்க இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்படுவதாலும் இதனை அறியமுடிகிறது. ஆயினும் சிவபெருமானை முதன்மைக் கடவுளாகக் கொண்டு வழிபடும் நெறி சைவசமயம் ஆகும். சைவ அடியார்கள் சிவபெருமான் மீது பல இலக்கியங்கள் இயற்றியுள்ளனர். அவற்றுள் பெரிய

புராணம் ஒரு சிறப்பான நூலாகும். இப்புராணம் சிவபெருமானைத் தலைவனாகக் கொண்டு அமைந்தாலும் அவரைப் பின்பற்றும் 63 நாயன்மார்களின் சிறப்பைச் சொல்லுவதாகவே விளங்குகிறது. அவர்களது வாழ்வின் வழியே சிவபெருமானின் தன்மைகளை எடுத்துரைப்பதாக அமைகிறது. இப்புராணத்தை இயற்றியவர் சேக்கிழார். இப்புராணம் தொடங்க இறைவனே “உலகெலாம்” என்று அடியெடுத்துக் கொடுத்தார் எனக் கூறப்படுகிறது. அதனாலேயே பாடலின் முதல், இடை, கடை என மூன்று இடங்களிலும் உலகெலாம் என்னும் சொல் அமைந்துவருகிறது. இப்புராணத்தில் பல்வேறு குலத்தினர் நாயன்மார்களாகத் திகழ்கின்றனர். இதன் மூலம் கடவுள் எல்லா மக்களும் வழிபடக்கூடியவர் என்பதையும் அவரை வழிபடுபவர்களுக்கு இடையே வேற்றுமைகள் தேவையில்லை என்பதையும் அறியமுடிகிறது. இது சைவர்களைப் பற்றி மட்டுமே அமைந்த நூலாகும். இதில் சைவ அடியார்களின் வாழ்க்கையினை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் சேக்கிழார். இந்நூல், இரண்டு காண்டங்கள், 13 சருக்கங்கள், மொத்தம் 4286 பாடல்களைக் கொண்டுள்ளது. நாயன்மார்களைப் பற்றிக் கூறும் நூல்கள் மூன்று. ஒன்று சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத்தொகை; அடுத்தது நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி; மூன்றாவது சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம். இவை முறையே தொகை வகை விரி என்ற தன்மையில் அமைகின்றன. 63 நாயன்மார்களில் திருநாவுக்கரசு நாயனார் சைவத்திற்கும் தமிழுக்கும் பல தொண்டுகள் செய்துள்ளார். அச்சிறப்புகளை, சேக்கிழார் தெளிவாகவும் விரிவாகவும் இந்நூலில் குறிப்பிடுகிறார்.

**புலவர் புராணம்**

கோவில்கள், தெய்வங்கள் பற்றிப் பாடும் புராணங்கள் பல தமிழில் தோன்றியுள்ளன. அத்தகைய புராணங்களுக்கிடையில் புலவர்களின் வரலாற்றினைப் பாடும் சிறப்புமிக்கதாகப் புலவர் புராணம் அமைகிறது. இதனை இயற்றியவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இப்புராணம் 72 புலவர்களைப் பற்றிக் குறிக்கிறது. இதில் 3005 பாடல்கள் உள்ளன. சைவம், வைணவம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம், சாக்தம் போன்ற அனைத்துச் சமயப் புலவர்கள் பற்றியும் தெளிவாகக் குறிக்கிறது இந்நூல். அதுமட்டுமின்றி சில இசுலாமியப் புலவர்களைப் பற்றியும் இதனால் அறியமுடிகிறது.

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**

**செய்தொழில் வேற்றுமை யான்"** **(குறள்.942)**

என்னும் குறள் உயிர்கள் பிறப்பால் ஒருதரத்தினர், தொழிலாலேயே பிரிக்கப்படுகின்றனர் என்பதை உணர்த்துகிறது. பெரிய புராணம் என்பது கடவுளை வணங்கும் அடியார்களில் வேறுபாடுகள் இல்லை என்பதை உணர்த்துகிறது. அதுபோலவே புலவர் புராணமும் தமிழ் மொழியின் மேன்மையினை உயர்த்த வரும் புலவர்க்குச் சமயமும் குலமும் இல்லை என்பதை உணர்த்துகிறது. புலவர் புராணத்தில் பல புலவர்களைக் குறிப்பிட்டுள்ள தண்டபாணி சுவாமிகள் திருநாவுக்கரசு நாயனாரைப் பற்றியும் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இருபுராணங்களும் ஒருமித்த பல கருத்துக்களைக் கொண்டு அமைகின்றன.

**திருநாவுக்கரசர் தோற்றம்**

புலவர் புராணம் கூறும் பல புலவர்களின் வாழ்வியல் நல்ல ஒழுக்க நெறிகளைத் தரும் வகையில் அமைகிறது. அதனைத் தண்டபாணி சுவாமிகள் தன் பாடல்கள் மூலம் தெளிவாகக் குறிக்கிறார். இப்புராணத்தில் திருநாவுக்கரசரின் வரலாறு பல செம்மையான கருத்துக்களைக் கொண்டு அமைகிறது. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலுமாக 81 வயது வரை வாழ்ந்தவர் திருநாவுக்கரசர். இறைவன் மீது 4900 பாடல்கள் பாடியுள்ளார். கிடைப்பவை 3066 பாடல்கள் மட்டுமே. இவர் மற்ற அருளாளர்கள் போல் பாடல் பாடியதோடு கோயில்களில் திருப்பணியும் செய்தார். இதனாலேயே திருநாவுக்கரசர் மூவர் முதலிகளில் சிறப்பான ஒருவராகத் திகழ்கிறார். தண்டபாணி சுவாமிகள் திருநாவுக்கரசரின் வரலாற்றினைப் பற்றி சேக்கிழார் சிறப்பாகக் கூறியுள்ளார் என்பதைக் குறிப்பிட்டே திருநாவுக்கரசர் வரலாற்றினைத் துவங்குகின்றார். இதனை,

**"திருநாவுக் கரசர்புகழ் சேக்கிழார் மிகச்சொன்னார்**
**பெருமாதைக் கதையினிடை பேசினேன் சிறிதந்தாள்**
**கருகூல மெனப்புலவர் காணிதினுங் கலைவாணி**
**தருமாறு சொல்கின்றேன் றவப்பயன் பெற்றுய வென்றே"** **(பு.பு, தி.ச, பா-1 )**

என்ற இப்பாடலின் மூலமாக அறியமுடிகிறது. தண்டபாணி சுவாமிகள் கலைவாணியின் அருள் கொண்டு அவள் தருமாறு சொல்கிறேன் எனப் பாடலை முடிக்கிறார். இதன்மூலம்

சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசரின் வரலாற்றை மிகத்தெளிவாக விளக்கியுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

முற்காலத்தில் மக்கள் அரசன், அந்தணன், வணிகன், வேளாளன் என்று நான்கு குலமரபுகளாக வாழ்ந்துவந்தனர். இப்படி அமைந்த சமூகத்தில் வேளாள மரபில் திருநாவுக்கரசர் தோன்றினார். திலகவதியாரின் பின் தோன்றியவர் என்றும் உலகில் உள்ள இருளை நீக்கவும் சைவத்தை வளர்க்கவும் தோன்றியவர் என்றும் இருபுராணங்களும் குறிப்பிடுகின்றன. இதனை,

**“திலகவதியார் பிறந்து சிலமுறையாண்டு அகன்றதன் பின்**
**அலகுஇல் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ**
**உலகில்வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர் போல**
**மலரும் மருள் நீக்கியார் வந்து அவதாரம் செய்தார்”** **(பெ.பு, தி.பு, பா-18)**

என்றும்

**விலக்கு இல் மனை ஒழுக்கத்தின்**
**மேதக்க நிலை வேளாண்**
**குலத்தின்கண் வரும்பெருமை** **(பெ.பு., தி.பு., பா-)**

என்றும் வரும் பாடல்கள் மூலம் அறியலாம். இது போலவே புலவர் புரணத்திலும் பிறப்பு பற்றியும் குலம் பற்றியும் திலகவதியாரின் பின் பிறந்தார் என்பதையும் அறியமுடிகிறது. இதனை,

**“நோய்மூப்புத் தவிர்ந்தாரு நுவல்புகழ்சா னடுநாட்டு**
**வாய்மூரில் வேளாளன் மனையிலொரு மகவாகித்**
**தூய்மூர லிளநகைமென் றோகையின்பின் வளர்ந்துபசுங்**
**காய்மூத்துப் பழுத்தாங்கு கருணைமலி வடைந்தானே”** **(பு.பு, தி.ச, பா-3)**

என்னும் பாடலின் மூலம் அறிய இயலுகிறது. இதன் மூலம் அக்காலத்தில் மக்கள் சமூகம் குலங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கலாம் என்பதும் திலகவதியாரின் பின் பிறந்தவர் திருநாவுக்கரசர் என்பதும் புலனாகிறது. திலகவதியாரைக் குறிப்பிட்டு திருநாவுக்கரசரை அறிமுகம் செய்வது எதற்கு என்றால், திருநாவுக்கரசர் சமண சமயம் சென்றபின் அவரை, சைவசமயத்திற்கு மீட்க முதன்மைக் காரணமாக விளங்கியவர் திலகவதியார். அதனாலேயே

அவரை முன் சொல்லிப் பின் திருநாவுக்கரசரை இரு புலவர்களும் குறிப்பிடுகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

**திருநாவுக்கரசர் சமணத்தை அடைதல்**

திருநாவுக்கரசரின் தமக்கையான திலகவதியாருக்குத் திருமண ஏற்பாடுகள் நடந்தன. அப்போது மாப்பிள்ளையானவர், தனது அரசர் அழைத்ததன் காரணமாகத் போர் செய்யச் சென்று போர்க்களத்தில் மாண்டுவிடுகிறார். இதனால் துயரம் கொண்ட திலகவதியார் திருமணத்துக்கு முன்பே இல்லறத்தை வெறுத்துத் துறவறம் மேற்கொண்டார். இதனைக் கண்ட அவர்களின் தாயும், தந்தையும் மனம் நொந்து கயிலைப் பதியடைந்தனர். இதனை,

**“தாயும் தாதையாரும் பயந்த தாயாரும் இறந்ததன் பின்” (பெ.பு, தி.பு, பா-29)**

என்னும் பாடல் அடிகள் மூலம் அறியமுடிகிறது. இச்செய்தி புலவர் புராணத்தில்

**“அவ்விருவர் கருமேங்கி யவிர்கயிலைப் பதிசேர்ந்தார்” (பு.பு, தி.ச, பா-8)**

என்னும் பாடலடிகளால் குறிக்கப்படுகிறது.

இதன் பின்பு நிலையில்லாத வாழ்வினை உணர்ந்த திருநாவுக்கரசர் சமண சமயம் தனக்கு ஏற்றது எனக் கருதி சமணத்தை ஏற்றார் என்பதை அறியமுடிகிறது. இதனை,

**“கொல்லாமை மறைந்து உறையும் அமண் சமயம் குறுகுவார்” (பெ.பு, தி.பு, பா-37)**

என்னும் பெரியபுராணப் பாடலின் மூலம் அறியலாம். இதுபோலப் புலவர் புராணத்திலும் திருநாவுகரசர் சமணத்தை அடைந்த செய்தியை அறியமுடிகிறது. இதனை,

**“தேள்வினைஞர் பகைமீறிச் சினன் சமயத் திடைபுக்கு**
**வாள்விதிர்த் தாங்கவிர் கண்ணார் மயலறுமா முனியாகி” (பு.பு, தி.ச, பா-4)**

என்னும் பாடலடியின் மூலம் அறியலாம். இவ்விரு புராணப் பாடல்களின் மூலமாகத் திருநாவுக்கரசர் சமணத்தை அடைந்த செய்தி தெளிவுபடுத்தப்படுகிறது.

இதுமட்டும் அல்லாமல் சமணத்தை அடைந்த திருநாவுக்கரசர் அச்சமயத்தின் ஒழுக்க நெறியினைப் பின்பற்றி அச்சமயத்தின் தலைமைப் பொறுப்பும் பெற்று தருமசேனர் என்னும் பட்டமும் பெற்றார். இதனை,

**“துங்கமுழு உடல்சமணர் சூழ்ந்துமகிழ்வார் அவர்க்கு**
**தங்களின் மேலாம் தருமசேனர் எனும்பெயர் கொடுத்தார்”** **(பெ.பு, தி.பு, பா-39)**

என்று பெரியபுராணமும்

**“தருமசே னப்பெயருந் தலைக்கொண்டச் சமயத்தோர்**
**குருவெனப்போற் றிசைத்துமகிழ் கொள்கையோடு”** **(பு.பு, தி.ச, பா-5)**

என்று புலவர் புராணமும் குறிப்பிடுகின்றன. திருநாவுக்கரசர் தருமசேனர் என்னும் பெயர் பெற்றதோடு சமணர்களுக்குக் குருவாகவும் திகழ்ந்தார் என்பதை இதனால் அறியமுடிகிறது.

இதன் மூலம் சைவத்திற்குப் பின் அக்காலத்தில் சமணம் மிகப் பெரிய சமயமாகத் திகழ்ந்தது என்பதை அறியமுடிகிறது. சைவத்தில் இருந்து சமணம் தனக்கு ஏற்றது என்பதை அறிந்து திருநாவுக்கரசர் சென்றார் என்பது இதனை உறுதிப்படுத்துகிறது.

**திருநாவுக்கரசர் மீண்டும் சைவ சமயம் அடைதல்**

சைவத்தில் இருந்து சமணத்திற்குச் சென்று அச்சமயத்தின் கொள்கைகள் எல்லாம் பின்பற்றுபவராக திருநாவுக்கரசர் சமண சமயத்தில் இருப்பதைக் கண்டு மனம் விரும்பாத திலகவதியார், அதிகை வீரட்டானம் என்னும் தலத்து இறைவனிடம் அவருக்கு நல்ல நெறி அளித்து மீண்டும் சைவராக்கும்படி வேண்டினார். அதன் பொருட்டு இறைவன் திருநாவுக்கரசருக்குத் தீராத சூலை நோயினைக் கொடுத்தார். சமணத் துறவிகள் பலர் பல மருந்துகள் கொடுத்தும் மந்திரம் ஓதியும் நோய் தீரவில்லை துன்பத்தில் யாவருக்கும் அன்னையின் நினைவு வரும். அன்னை இறந்து போனதால் தாயும் தமக்கையுமான திலகவதியாரின் நினைவு வர அவர் இருக்கும் இடத்தைத் தன் ஏவலர்கள் மூலம் அறிந்த திருநாவுக்கரசர் அவரைக் காண அதிகை வீரட்டானம் நோக்கிச் சென்றார். அப்போது தமக்கையார் திருநாவுக்கரசரை இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு அவரைத் துதிக்கும்படி கூற, அதன் பொருட்டு இறைவனைத் துதித்து “கூற்றாயின வாறு” எனத் துவங்கும் பாடலை பாடி சூலை நோய் நீங்கப்பெற்று சைவர் ஆனார். இதனை,

**"மாற்றார் புரம் மாற்றிய வேதியரை**
**மருளும் பிணிமாயை அறுத்திடுவான்**
**"கூற்றாயின வாறுவிலக் ககிலீர்"**
**எனநீ டியதோதுஇல் திருப்பதிகம்**
**போற்றால் உலகு ஏழின் வரும் துயரும்**
**போமாறு எதிர்நின்று புகன்றனரால்"** (பெ.பு, தி.பு, பா-70)

என்னும் பெரிய புராணப் பாடல் மூலம் அறியமுடிகிறது. இச்செய்தி புலவர் புராணத்தில்,

**"துணிந்தரனைத் துதி செயனச் சொன்னாள் போற்றிச்**
**சூலைவியா தியுமனத்தின் துயருந் தீர்ந்தான்"** (பு.பு, தி.ச, பா-12 )

என்று பாடப்பட்டுள்ளது. மேலும்

**"அன்று தொட்டுப் பதிகங்கள் பலவாப் பாடி**
**ஆனந்த பரவசனா அருட்பே ராக்கம்**
**துன்றுதலுற் றுஞ்சிறிதும் ஆண்மை யின்றித்**
**தோள்வருந்த உழவாரப் பணியும் செய்தான்"** (பு.பு, தி.ச, பா- 13)

என்னும் பாடலின் மூலம் சமணத்தை விட்டுச் சைவத்தையடைந்து பல பதிகங்கள் பாடியதோடு உழவாரப் பணியும் திருநாவுக்கரசர் செய்தார் என்பதை அறியமுடிகிறது.

சைவ சமயத்தை விட்டுச் சமண சமயம் சென்று அச்சமயத்தார்க்குத் தலைவனான பின்னும் அச்சமயம் விட்டு மீண்டும் சைவத்தை திருநாவுக்கரசர் அடைந்தார். இதனை,

**"குடர் சுலவு சூலைப் பிணிகெ டுத்தொளிர்**
**சுடுவெ ணீறிட் டமணகற்றிய**
**துணிவி னான்முப் புரமெரித்தவர்**
**சுழலி லேபட் டிடுத வத்தினர்"** (11.தி.பதி.41)

என்னும் பாடலும் விளக்குகிறது. சைவசமயம் மிகச் சிறப்பு மிக்கது என்பதை இச்செய்தி தெளிவு படுத்துகிறது. சமணம் சைவத்தை விடச் சிறந்தது இல்லை என்பதையும் அறியமுடிகிறது.

**சமணர்களால் நேர்ந்த இன்னல்கள்**

சிவபெருமானின் கருணையினால் சமணத்தில் இருந்து சைவ சமயத்திற்கு மாறிய திருநாவுக்கரசரைக் கண்ட சமணர்கள் அஞ்சினர். அவரது சூலை நோயினைச் சமணர்களால் தீர்க்க முடியவில்லை என்பதும் சைவரானதால்தான் தீர்ந்தது என்றும் அரசரிடம் சொன்னால்

சமணர்களைத் துன்புறுத்துவார் என்று அஞ்சி, அரசனிடம் சமணத்திலிருந்து கற்ற மந்திரத்தால்தான் திருநாவுக்கரசர் நோய்தீர்ந்தார் என்று பொய் சொல்லி, திருநாவுக்கரசருக்குப் பல துன்பத்தினை ஏற்படுத்தி அவரைக் கொன்று விட வேண்டும் என்று நினைத்தனர். அதனால் அரசனிடம் பொய்களைச் சொல்லி திருநாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காளவாயில் இட்டு, கொல்ல நினைத்தனர். ஆனால்

**"மாசில் விணையும் மாலை மதியமும்"**

என்னும் பதிகத்தைப் பாடி இறைவனின் கருணையினால் சுண்ணாம்புக் காளவாயிலிருந்து வெளியில் வந்தார். இதனை,

**"புல அறிவோர் அஞ்சாது நீற்று அறையில் இடப்புகன்றார்"** (பெ.பு, தி.பு, பா-95)

என்னும் பெரியபுராணப் பாடலடி மூலம் அறியமுடிகிறது. மேலும் புலவர் புராணத்தில் வரும்

**"மொன்றடரச் செலுத்திடல்கற் சுண்ணந் தன்னோடு நீற்றன்**

**முதலியபல் லொறுப்புச் செய்திட"** (பு.பு, தி.ச, பா-17 )

என்ற பாடல் மூலமும் சுண்ணாம்புக் காளவாயிலில் அவரை அடைத்த செய்தி புலனாகிறது.

**கல்லில் கட்டிக் கடலில் இட்ட படலம்**

சமணர்கள் தங்கள் செய்த சதியிலிருந்து தப்பிய திருநாவுக்கரசர் மீது கோபம் கொண்டு அரசரிடம் அவரைக் கல்லில் கட்டிக் கடலில் இடவேண்டும் என்று கேட்க அரசனும் சரி என்று ஒப்புக்கொண்டு திருநாவுக்கரசரைக் கல்லில் கட்டிக் கடலில் தள்ளினான். இந்தச் செய்தியை, பெரிய புராணத்தில் வரும்

**"கல்லுடன் பாசம் பிணித்துக்**

**கடலினிடைப் பாய்ச்சுக என்றார்"** (பெ.பு, தி.பு, பா-122)

என்ற பாடல் மூலமாக அறியமுடியும். திருநாவுக்கரசர் அதற்கும் அஞ்சாமல் இறைவனை நினைத்துத் துதித்தார். அவர் பாடிய பாடலைக் கேட்டு இறைவன் அருள் செய்தார். அப்பாடல்,

**"சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே"** (தி.தே, திரு-4, பதி-11, பா-1 )

என்பதாகும் இப் பாடலினைப் பாடி கல்லினைத் தெப்பமாக மாற்றி மிதந்து கரைக்கு வந்தார்.

மேலும்,

**“எப்பரிசு ஆயினும் ஆக**
**ஏத்துவன் எந்தையை என்று**
**செப்பிய வந்தமிழ் தன்னால்**
**சிவன் அஞ் செழுத்தும் துதிப்பர்”** (பெ.பு, தி.பு, பா-125)

என்னும் பாடலின் மூலம் அவர் அஞ்சாமல் சிவபெருமானைத் துதித்ததை அறியமுடிகிறது. புலவர் புராணம்,

**“கடலிடைவீழ்த் தலுங்கருங்கன் மிதப்பக் கட்டுங்கயி றவிழமிசை**
**யிருந்து களித்துச் செங்க, ணடல்விடையாற் கருதியெழுத்**
**மாசியவிர் தருசெந் தமிழ் பதிக மறைந்தா னந்நீர்”** (பு.பு, தி.ச, பா- 19)

என்னும் பாடல் மூலம் திருநாவுக்கரசர் கடலில் மூழ்காமல் மிதந்ததையும் மேலும் பதிகம் பாடியதையும் விளக்குகிறது. இதன் மூலம் சமணர்களின் செல்வாக்கானது அக்காலத்தில் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதையும் சமணர்கள் சொல் கேட்டு மன்னர்கள் சைவர்களைத் துன்பப் படுத்தினர் என்பதையும் அறியமுடிகிறது. அத்துடன் சிவபெருமானை நம்பிக்கையுடன் துதித்து அடியார்கள் அத்துன்பத்தை விட்டு மீண்டதும் அறியப்படுகிறது.

## முடிவுரை

தண்டபாணி சுவாமிகள் இயற்றிய புலவர் புராணத்திலும், சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்திலும் திருநாவுக்கரசர் தோற்றம், வளர்ச்சி பற்றி இரு புலவர்களும் குறிப்பிடுகின்றனர். அதனுள் அமையும் ஒப்புமைகள் குறிக்கப்பட்டுள்ளன. திருநாவுக்கரசர் ஆற்றிய இறைபணிகள் உழவாரம் செய்தல் மெழுகிடுதல் விளக்கிடுதல் போன்ற பணிகளை இருபுராணங்களும் கூறும் முறை விளக்கப்பட்டுள்ளது. பல மதங்களாக இருந்தாலும், ஏற்றத் தாழ்வு இல்லாமல் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதும் இரு புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சைவ சமயம் முதன்மையான சமயம் என்று இரு புராணங்களும் தெளிவாக விளக்குகின்றன. சைவ சமயத்திற்கு மீண்டபோது திருநாவுக்கரசருக்கு ஏற்பட்ட இன்னல்கள் பற்றியும் சிவபெருமானின் மீது வைத்த பக்தித் திறத்தைப் பற்றியும் இக் கட்டுரை மூலம் அறியலாம். திருநாவுக்கரசரின் பெருமைகளை இரு நூல்களும் சிறப்பாக குறிப்பிடுகின்றன.

**துணைநூற்பட்டியல்**


1. புலவர் புராணம் – வெங்கட்ராமன்.சு உரை(2023), தாமரை பிரதர்ஸ் மீடியா, மதுரை.
2. பெரிய புராணம் – ஆறுமுகத் தம்பிரான் உரை (2019), திருவண்ணாமலை ஆதீனம்
3. திருநாவுக்கரசர் தேவாரம் – சிவஞானம்.வீ, உரை(2015), விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்
4. திருக்குறள் - சிதம்பரனார்.வ.உ உரை (2008), பாரி நிலையம், சென்னை.
5. தமிழ் இலக்கிய வரலாறு - அருணாச்சலம். மு(1973), தி பார்க்கர் பதிபகம், சென்னை.
6. திருநாவுக்கரசு தேவர் திரு ஏகாதசமாலை - பதினோறாம் திருமுறை, வர்த்தமானந்த பதிப்பகம், சென்னை.


**References**


1. Pulavar Puranam – S.Venkatraman (narration), 2023, Thamarai Brothers Media, Madurai
2. Periyapuranam – Arumuga thambiran (narration), 2019, Thiruvannamalai Aadheenam
3. Thirunavukkarasar Devaram – V.Sivagnanam (narration), 2015, Vijaya Pathipagam, Coimbatore
4. Thirukkural – V.O.Chidhambaram (narration), 2008, Pari Nilayam, Chennai
5. Tamil ilakkiya varalaru - Arunachalam. M (1973), The parkar pathipakam, Chennai
6. Thirunavukarasu devar thiru eragamalai - pathinoram thirumurai, varthanantha pathipakam, chennai


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**பிரவீன் குமார் ம “ பெரியபுராணத்தில் மற்றும் புலவர் புராணம் திருநாவுக்கரசர் வரலாறு ஒப்பீடு”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 4, இதழ் 1, சனவரி 2024, பக். 15-25


**Cite this Article in English**


**Praveen Kumar M “ A comparison of the history of Tirunavukarasar in Periyapuranam and Pulavar Puranam”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.4 Issue 1, January 2024, pp. 15-25